சுருக்கம்

பொதுப்பணிகள் – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சி உதவி இயக்குநர்கள் – தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளுக்கான பொது விதிகளில் விதி 10(a)(i)-ன் கீழ் பேரூராட்சி / மூன்றாம் நிலை நகராட்சியில் பணிபுரியும் சிறப்புநிலை செயல் அலுவலர்களிலிருந்து பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்களாக பணி நியமனம் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1) துறை

அரசாணை (ப) எண்.518 நாள் 27.11.2009.

படிக்கவும்:

1. பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந. க. எண்.12250/09/அ1, நாள் 05.08.2009.
2. பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந. க. எண்.12250/09/அ1, நாள் 04.09.2009 மற்றும் 15.10.2009.
3. பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந.க. எண்.12250/09/அ1, நாள் 25.11.2009.

-------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பேரூராட்சிகளின் இயக்குநர் தற்போது காலியாக உள்ள 10 பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பணியிடங்களை தகுதியுடைய சிறப்புநிலை செயல் அலுவலர்களைக் கொண்டு 2008–09ஆம் ஆண்டிற்கான தற்காலிக பட்டியல் வெளியிடுமாறு அரசினை கோரியுள்ளார். இதற்காக, பேரூராட்சிகள் துறையிலுள்ள சிறப்புநிலை செயல் அலுவலர்கள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் தகுதியுடைய சிறப்பு நிலை செயல் அலுவலர்கள் ஆகியோருக்கான விவரங்களை பெற்று அரசிற்கு அனுப்பி இருந்தார். அரசு, அவற்றை கவனமாக ஆய்வு செய்தபின் 2008–09ஆம் ஆண்டிற்கான காலி பணியிட மதிப்பீட்டு காலம் (19.08.2008 முதல் 18.08.2009 வரை) முன்னரே முடிந்துவிட்ட நிலையிலும், இந்த காலிப் பணியிடங்களை உடனடியாக மேலும் காலம் தாழ்த்தாது நிரப்பப்பட வேண்டிய அவசியத்தினை கருத்தில் கொண்டும், தற்போது 10 காலிப் பணியிடங்களை உடனடியாக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளுக்கான பொது விதிகளில் விதி 10(a)(i)–ன் கீழ் கீழ்க்கண்ட சிறப்புநிலை செயல் அலுவலர்களைக் கொண்டு, பேரூராட்சிகளின் 10 மண்டல உதவி இயக்குநர் காலிப்பணியிடங்களில் அவர்களது பெயர்களுக்கெதிரே குறிப்பிட்டுள்ள மண்டலங்களில் தற்காலிக நியமனம் செய்து அரசு இதன் மூலம் ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு. சே. அப்துல் கலீல் | – | வேலூர் |
| 2. திரு. எஸ். சம்பந்தம் | – | திருச்சிராப்பள்ளி |
| 3. திரு. எம். பாலசுப்பிர மணியன் | – | தஞ்சாவூர் |

4. திருமதி. ஆர். ஜாய் கிறிஸ்டல் – கோயம்புத்தூர்
5. திரு. அ. செல்வராஜ் – உதகமண்டலம்
6. திரு. சி. தெய்வநாயகம் – சிவகங்கை
7. திரு. ஆர். சீனிவாசன் – திருநெல்வேலி
8. திரு. அ. சடையப்பன் – கடலூர்
9. திரு. ஜி . குப்புராஜ் – திண்டுக்கல்
10. திரு. எம். சண்முக சுந்தரம் – மதுரை

2. இந்த பணி நியமனம் தற்காலிகமானது என்பதுடன் 2009–10ஆம் ஆண்டிற்கான காலியிட மதிப்பீட்டு காலத்தில் இப்பணியிடங்களுக்கான பட்டியல் தயாரிக்கும்பொழுது இந்த தற்காலிக பணி நியமனங்களையும் உள்ளடக்கி கருத்துரு அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுருத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.
பேரூராட்சிகளின் இயக்குநர் / நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக
பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை 600 108.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை 600 005.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, உதகமண்டலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் கடலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மண்டலங்கள்.
மாநில கணக்காயர் (கணக்கு) சென்னை 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை 600 018.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை சென்னை 600 108
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை
மாவட்ட கரூவூல அலுவலர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, நீலகிரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் கடலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்
<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ 2, அநமு 2) சென்னை 600 009
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை 600 009.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(க. ரங்கசாமி) 27/11/09
அரசு சார்புச் செயலாளர்

27/11/09